பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No' QB/89 5/78

மலர்: 21 மாசி 18 ரபி-ஆகி 2 இதழ் 20
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 2-3-79

காது கேட்கவில்லையா?
பிரச்னையை இன்றேமறந்திடுக
ஃ காது கேட்கும் கருவிகள் நேரில் வந்து பரீட்சித்து சகாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
மற்றும்
ஃ சகலருக்கும் ஏற்ற இறக்குமதி செய்யப்பட்ட ஆடைகள் சகல வகைகள்.
ஃ பெண்களின் அழகிய கைப் பைகள் யாவற்றையும் மலிவாகப் பெற்றுக்கொள்ள
கிருபா கிவ்ற் கவுஸ்
சோதிட விலாஸ் கட்டிடம்
46, பெரியகடை - யாழ்ப்பாணம்.

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA
RECEIVED
1979 -3-- 1
PERIODICALS DIVISION
LIBRARY

# 27,000சீனத் துருப்பினர் யுத்தத்தில் பலியாகினர்!

## லாங்சோன் நகரில் கடும்சமர் ரஷ்யதலையீடு இன்றுமுடிவு

(பாங்கொக்)

பெப்ரவரி 17-ந் திகதி சீன வியட்நாம் யுத்தம் ஆரம்பித்ததற்கும் பின்னர் 27 ஆயிரம் சீனத் துருப்புக்களை கொன்றுவிட்டதாக வியட்நாமியர் அறிவித்துள்ளனர்.

லாங்சோன் என்ற மாகாணத் தலைநகரை கைப்பற்றுவதற்காக இப்பொழுது உக்கிரமான போர் நடைபெற்று வருகின்றது.

வியட்நாமியர் தமது இராணுவத்தின் முதலாவது படைப்பிரிவை சண்டையில் ஈடுபடுத்தியுள்ளது.

எல்லைப்பகுதியில் வியட்நாமியர் ராணுவ ஆத்திர மூட்டல்களில் ஈடுபட மாட்டோம் என வாக்குறுதியளித்தால் சீனப்படைகள் வாபஸ் பெறப்படும் என்று சீன உதவிப் பிரதம மந்திரிகளில் ஒருவரான லி ஷியாங் லியன் கூறியுள்ளார்.

வியட்னாமின் முக்கிய மாகாணத் தலைநகர் லாங்சோனைக் கைப்பற்றப் பெரும் போர் நடைபெற்றுவருகிறது. இந்த நகரைப் பாதுகாக்க வியட்நாமியர் தமது ராணுவத்தின் முதலாவது படைப பிரிவைப் பயன்படுத்துகின்றனர். சீனர்களின் முக்கிய குறிக்கோளில் இந்த நகரைக் கைபற்றுவதும் ஒன்றெனக் கருதப்படுகின்றது. இப்பகுதியில் சீனப் படைகளை முன்னேறவிடாமல் வியட்நாம் துருப்புகள் உக்கிரமாகப் போராடிவருகின்றன.

சீனாவுக்கும் வியட்னாமுக்குமிடையில் போர் நிறுத்தப் பேச்சு ஆரம்பமானதன் பின்தான் படைகளை வாபஸ்பெறுவது என்றில்லை. எமது நோக்கம் நிறைவேறியதும் படைகள் வாபஸ்பெறப்படும். எல்லைப் பகுதியில் ராணுவ ஆத்திரமூட்டங்களில் ஈடுபடுவதில்லையென வியட்நாம் உறுதியளிக்கவேண்டுமென்று சீன உதவிப் பிரதமமந்திரிகளில் ஒருவரான லீஷியான்லியங் கூறியிருக்கிறார்.

### தொண்டர் படை

ரஷ்ய-வியட்நாம் நட்புறவு ஒப்பந்தத்திற்கு அமைய ரஷ்யத் துருப்புக்களை வியட்நாமுக்கு அனுப்புவது பற்றி ரஷ்யா ஆலோசித்துவருகின்றது.

இதுகுறித்து இறுதிமுடிவை ரஷ்யத் தலைவர் திரு. பிரஷ்னேவ் வெள்ளிக்கிழமை அறிவிப்பாரென்று மாஸ்கோவிலுள்ள ஜப்பான் செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

ஐ. நா. பாதுகாப்புச்சபைக் கூட்டம், வியட்நாம் சீனப் போர் பற்றிய தீர்மானம் எதுவும் எடுக்கமுடியாது தேதி குறிக்காமல் ஒத்திப்போடப்பட்டுள்ளது.

அமெரிக்கா 30 ஆண்டுகளின் பின்னர் பீகிங்கில் தனது தூதரகத்தை நேற்றுத் திறந்தது சீனாவும் வாஷிங்டனில் தனது தூதரகத்தைத் திறக்கவிருக்கிறது

## ஆட்சேபமனு தள்ளுபடி

[கொழும்பு]

காலி தேர்தல் ஆட்சேபனை மனுவை உயர்நீதிமன்றம் நேற்று செலவு தொகையுடன் தள்ளுபடி செய்தது.

திரு அல்பேர்ட் சில்வா. காலித் தொகுதி எம். பி யாகத் தெரிவுசெய்யப்பட்டதை ஆட்சேபித்து டாக்டர் தசநாயக்கா இவ்வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

பிரதிவாதிக்கு வழக்குச் செலவைக் கொடுக்குமாறு வாதிக்கு உத்தரவிட்ட உயர் நீதிமன்றம் வழக்கைத் தள்ளுபடி செய்தது [இ]

குரும்காராஜியின் பிரதம சீடர்களில் ஒருவரான

ஜக்தியோ மகாத்மாவின் வருகை

தெய்வீக ஒளிச்சங்கத்தின் அருளுரைக் கூட்டம்

இடம்: இராமநாதன் கல்லூரி, மருதனுமடம்.
காலம்: 3-3-79 மாலை 6-00 மணி.
இடம்: யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.
காலம்: 4-3-79 மாலை 6-00 மணி.

மனித குலத்தை இரட்சிக்க மானிட உருவில் வந்துள்ள பூரண சற்குரு பற்றி அறிய வருவீர்களாக. 1803

சிறை சென்றுலும்

## சஞ்சய்க்கு அதிர்ஷ்டம் தேடி வருகிறது

சிட்னி, மார்ச் 1

முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் மகன் சஞ்சய் காந்திக்கு ஒருபுறத்தில் ஜெயில் தண்டனை அனுபவிக்க நேர்ந்தபோதிலும் இன்னொரு புறத்தில் அதிர்ஷ்டம் தேடிவந்திருக்கிறது

முன்னைய அரசின் தவறான நடவடிக்கைகளை எடுத்துக்காட்டும் சினிமாப்படம் ஒன்றை அழித்தமைக்காக சஞ்சய் காந்திக்கு 2 வருடக் கடுழியச் சிறைத்தண்டனை சில தினங்களுக்குமுன் புதுடில்லி நீதிமன்றம் ஒன்றினால் வழங்கப்பட்டது.

இதேசமயம் ஆஸ்திரேலியாவிலுள்ள ஒரு சீமாட்டி தமது சொத்து முழுவதையும் சஞ்சய் காந்திக்கு கிடைக்கும்படி உயில் எழுதி வைத்துவிட்டு மரணமாகியுள்ளார்.

இந்தியாவின் விடுதலை வீரரும் முன்னாள் பிரதமருமான ஜவஹர்லால் நேருவின் நேரடிவாரிசான பேரனுக்கு தமது சொத்துக்கள் சேர வேண்டுமென அந்தச் சீமாட்டி உயில் எழுதி வைத்துள்ளார்.

## சித்தைத்துணி விலை 60 சதத்தால் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

சித்தைத் துணியின் விலை மீற்ரருக்கு 60 சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது

முன்பு ஒரு மீற்ரர் 8 ரூபா 70 சதமாகவிற்ற சித்தைதுணி தற்போழுது 9 ரூபா 30 சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் வெளிநாட்டுச் சித்தைத் துணிகள் பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்பட்டுவருகின்றன

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பங்கீட்டு அட்டைகளுக்குச் சேலைகள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க-அ)

## பாதுகாப்புச் சபை கூட்டம் ஒத்திவைப்பு

நியுயோர்க், மார்ச் 1

சீன-வியட்நாம் விவகாரம் குறித்து ஆராய்வதற்காக அவசரமாகக்கூடிய ஐ நா. பாதுகாப்புச்சபை தீர்மானம் எதுவுமின்றி தனது கூட்டத்தை காலவரையறையின்றி ஒத்திவைத்தது.

பலத்த முட்டுக்கட்டைகள் காரணமாகவே இக்கூட்டத்தில் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

சீனாவையும் வியட்நாமையும் சபைத் தலைவா ஜஹப் அப்துல்லா மீசேரா கண்டித்துப் பேசினார்

சீன-வியட்நாம் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்குத் தாம் தனித்தனியாக நான்கு யோசனைகளைச் சமர்ப்பித்ததாகவும் அந்த யோசனைகள் சபையில் நிராகரிக்கப்பட்டதாகவும் ஜஹப அப்துல்லா கவலை தெரிவித்தார்

## 372 கொள்ளைகள்! 97 கொலைகள்!!

[கொழும்பு]

கடந்த மாதம், நாட்டில் 372 கொள்ளைச் சம்பவங்கள் நடந்துள்ளதாகக் குற்றத்தடுப்

[6-ம் பக்கம் பார்க்க]

சிறையிலிருக்கும்

# இளைஞர் கோரிக்கை மீதே அழைப்பு அனுப்பப்பட்டது

## நாளைய கூட்டம்பற்றி 'அமிர்'

[யாழ்ப்பாணம்]

''கண்டி போகம்பரைச் சிறைச்சாலையிலிருந்துஇளைஞர் பேரவைஅமைப்பு செயலாளர் திரு. மாவை. சேனாதிராஜாவும், வேணுதாஸும் எனக்கு விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக, நாளை என்னால் கூட்டப்படவுள்ள இளைஞர் பேரவைப் பொதுச்சபைக் கூட்டத்திற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து வெளியேறிய இளைஞர் பேரவைப் பொதுச்சபை உறுப்பினர்களுக்கும், இளைஞர் பேரவையினால் வெளியேற்றப்பட்ட பொதுச்சபை உறுப்பினர்களுக்கும், கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது'' என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் அ. அமிர்தலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்

அவர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

''தமிழ்த் தேசிய இனத்தின் ஒற்றுமையைக் கட்டிவளர்க்கவும், இளைஞர் மத்தியில், ஒற்றுமையை ஏற்படுத்தித் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அங்கமான இளைஞர் பேரவையை மீண்டும் கட்டுப்பாடாக, ஒற்றுமையாக இயங்கச் செய்வதற்குமே நாளை இளைஞர் பேரவை அமைப்பு வேலைக்குப் பொறுப்பான பொதுச்சபையைக் கூட்டவுள்ளேன் எனவே, மனக்குறைகளை மறந்து, இளைஞர் அணியைப் பலப்படுத்த, நாளைய கூட்டத்தில் அவர்களைக் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறேன்'' என்றும் அவர்குறிப்பிட்டுள்ளார். (கெ)

## மேலும்பலர் விசாரணை

[புலோலி[

புலோலி 1ம் கட்டை வயோதிபமாது மர்மக்கொலை சம்பந்தமாக மேலும் பலர் பொலிசாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்பட்ட நபர்கள் தேவையேற்படும் போது பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப் படுவார்கள் எனத் தெரிவித்த பொலிசார் இக்கொலை தொடர்பாக இன்னும் பலர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படவுள்ளதாகவும் தெரிவித்தனர். [அ]

## ஆசிரியை தேவை

காரைநகரில் பின்தங்கிய கிராமங்களில் படிப்பிப்பதற்கு ஆசிரியை தேவை. விண்ணப்பதாரர்கள் க. பொ. த. (சாதாரணம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும். க. பொ. த. (உயர்தரம்) சித்தியடைந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். 3-ந் திகதி (3-3-79) சனிக்கிழமை காலை 8-11 மணிக்கு நேரில் வரவும்.

P. A. ANDERSSON,
1780 Keerimalai Road, Pandatherippu,

## அறிவித்தல்


யாழ்ப்பாணம் 146ஆ ஆஸ்பத்திரி வீதியிலுள்ள விஜயா ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ் ஸ்தாபனத்தில் வேலைபார்த்து வந்த சோமசுந்தரம் சிறிஸ்கந்தராசா ஆகியவர் 30-11-78 திகதியிலிருந்து விலகிவிட்டார் என்பதை அறிவித்துக்கொள்கின்றோம்.

உரிமையாளர்:
விஜயா ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்.
1799

## தேவை

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள பெனின்சுலா கண்ணாடித் தொழிற்சாலைக்கு வேலை பழகுவோரும் குமிழர்களும் [BUBBLERS] உடனடியாகத் தேவை. நேரில் வரவும். 1787

## பிறந்ததின வாழ்த்து



உடுவில் செபமாலை மாதா கோவிலடியைச் சேர்ந்த துரைசிங்கம் ரஞ்சிதமலர் தம்பதிகளின் அன்பு மகன் நிக்ஸ்மன் இன்று 2-3-79 வெள்ளிக்கிழமை தனது முதலாவது பிறந்ததினத்தை குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அம்மா, அப்பா, அப்பம்மா, அப்பப்பா, அத்தைமார், மாமாமார், சித்தப்பாமார், அன்ரிமார், அத்தான்மார், மற்றும் சண்டிலிப்பாய் அம்மம்மா, அப்பையா, அத்தைமார், அங்கிள்மார், அன்ரிமார், அத்தான்மார், மற்றும் ஊரார், உறவினர், நண்பர்கள் (ஈழநாடு குணபாலன்) சகல செல்வமும் பெற்று நீடுழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தம்பிப்பிள்ளை துரைசிங்கம்
செபமாலைமாதா கோவிலடி,
உடுவில், சுன்னாகம். 1790

# பேச்சை விடுத்து

## செயலில் இறங்கவேண்டும்

### வட்டு. எம்.பி. கூறுகிறார்

[சங்கானை]

"தமிழ் மக்களாகிய எம்மை ஓர் இக்கட்டான காலம் எதிர் நோக்கியுள்ளது. இதில் இருந்து நாம் விடுபடுவதற்கு எமது பொருளாதாரத்தையும் ஒற்றுமையும் வலுப்படுத்தல் வேண்டும். பேச்சலே மட்டும் காலத்தை வீணாக்காது செயலிலும் இறங்குதல் அவசியம்."

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு சண்டலிப்பாய் தொட்டிலடி சனசமூக நிலைய 31-வது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

சங்கத் தலைவர் திரு. வி. கதிரமலை தலைமையில் நடைபெற்ற விழாவில் திரு. திருநாவுக்கரசு எம். பி. கூறியதாவது!

தார்மிகம் பேசிச் சொல்லும் அரசு எமது எதிர்காலச் சந்ததியினரான மாணவர்களின் உயிருக்குயிரான கல்வியையே பாழடித்து வருகிறது.

ஆசிரியர்களை தண்டிக்கவும் பொருளாதாரத்தில் நசுக்கவும், தமிழ் மக்களின் ஒற்றுமையை சிதறடிக்கவும் கங்கணம் கட்டியுள்ளது.

கடந்த காலத்தில் செனட் சபை உறுப்பினராக இருந்த திரு. நல்லையாவை ஜனாதிபதி வரவழைத்து சிறுபான்மையில் சிறுபான்மையாக இருக்கும் உங்களுக்கு அரசுடன் ஒத்துழைத்து நல்ல பதவிகளை பெற விருப்பமில்லையா என வினவியுள்ளார். இவை எல்லாம் தமிழ் மக்களை நசுக்கும் திட்டங்களல்லவா? ஆகவேதான் இனியும் அரசை நம்பியிராது பாரம்பரிய தமிழ் பிரதேசங்களான வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் வவுனியா போன்ற இடங்களில் குடியேறி எமது பிரதேசங்களையும் காப்பாற்ற வேண்டும்.

வெளி இடங்களில் இருக்கும் 10 லட்சம் மக்கள் இனியும் அங்கிருந்து மீண்டும் மீண்டும் அல்லற்படாது இப்பகுதிகளில் குடியேற வேண்டும். இவர்களுக்கான வசதிகளையும் அவ்வப்பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வந்து செய்வர்.

வசதியுள்ளோர் வெளியூர்களில் உள்ள மூலதனத்தை இப்பகுதிகளில் செலவிடுவார்களேயானால் நிச்சயம் சுபீட்ச வாழ்வு பெறலாம். எமது பிரதேசமும் காப்பாற்றப்படும்.

இலவசக் கல்வி

இளைப்பாறிய ஆசிரியர்
(5ம் பக்கம் பார்க்க)

## மலைவேம்பு, பாவித்த ரயர் கேள்விப்பத்திரமூலம் விற்பனை

காரைநகர் ப. நோ. கூ. சங்க வளவில் மலைவேம்பும், பாவித்த ரயர்களும் விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர் மேற்படி சங்க தலைமைக்கந்தோருடன் தொடர்பு கொண்டு தங்கள் கேள்விப்பத்திரங்களை தலைவர், காரைநகர் ப. நோ. கூ. சங்கம் என்ற முகவரிக்கு 15-3-79க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். கூடிய கேள்விக்காரர்களுக்கு விற்பனை செய்யப்படும்.

பொது முகாமையாளர்,
காரைநகர்
ப நோ. கூ. சங்கம்.
1793

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

தேசிய லொத்தர் சபையின் 706 வது சீட்டிழுப்பு நேற்று முன்தினம்மாலை கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் இழுக்கப்பட்டபோது முடிவுகள் வருமாறு:-

முதலாம் பரிசு
**32 V 0227**
ரூபா 1, 00, 000.

இரண்டாம் பரிசு
**20 J 0445**
ரூபா 40, 000.

மூன்றாம் பரிசு
**18 J 0322**
ரூபா 10, 000

ரூபா 1632 சதம் 09 கொண்ட 100 ஆறுதல் பரிசுகள் பின் வருமாறு:

| | |
|---|---|
| 05 A 0763 | 11 A 0162 |
| 04 B 0726 | 13 B 0762 |
| 03 C 0257 | 09 C 0673 |
| 16 C 0525 | 09 D 0547 |
| 02 E 0283 | 08 E 0410 |
| 10 E 0272 | 23 E 0028 |
| 27 F 0659 | 27 F 0866 |
| 01 G 0128 | 12 G 0619 |
| 13 G 0550 | 14 G 0733 |
| 24 G 0522 | 04 H 0348 |
| 14 H 0436 | 17 H 0615 |
| 18 H 0508 | 19 H 0882 |
| 21 H 0251 | 24 H 0094 |
| 01 J 0315 | 11 J 0136 |
| 25 J 0356 | 27 J 0011 |
| 05 K 0116 | 14 K 0643 |
| 14 K 0993 | 17 K 0403 |
| 17 K 0935 | 19 K 0836 |
| 20 K 0973 | 03 L 0864 |
| 13 L 0337 | 18 L 0944 |
| 10 M 0472 | 18 M 0106 |
| 20 M 0722 | 02 N 0322 |
| 02 N 0511 | 06 N 0195 |
| 01 O 0718 | 06 O 0812 |
| 07 O 0047 | 10 O 0110 |
| 19 O 0300 | 25 O 0547 |
| 27 O 0030 | 27 O 0977 |
| 02 P 0331 | 04 P 0776 |
| 05 P 0817 | 06 P 0205 |
| 09 P 0300 | 24 P 0713 |
| 24 P 0786 | 26 P 0683 |
| 11 Q 0528 | 12 Q 0927 |
| 19 Q 0644 | 25 Q 0821 |
| 27 Q 0429 | 27 Q 0694 |
| 23 R 0111 | 25 R 0465 |
| 25 R 0582 | 01 S 0281 |
| 08 S 0065 | 15 S 0959 |
| 18 S 0255 | 21 S 0902 |
| 23 S 0615 | 26 S 0394 |
| 19 T 0230 | 01 U 0870 |
| 10 U 0611 | 17 U 0371 |
| 01 V 0450 | 03 V 0295 |
| 18 V 0528 | 23 V 0532 |
| 05 W 0067 | 06 W 0814 |
| 14 W 0411 | 16 W 0118 |
| 16 W 0487 | 25 W 0081 |
| 02 X 0577 | 11 X 0813 |
| 14 X 0011 | 18 X 0420 |
| 21 Y 0215 | 06 Z 0974 |
| 25 Z 0524 | 25 Z 0577 |

இவையாவும் உறுதிப்படுத்தப் படவேண்டும்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பெரியவிளான் இளவாலையில் புதிதாகக் கட்டப்பட்ட கல்வீடும் 5 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு; அரியரத்தினம் தவமோகன், மானிப்பாய் மேற்கு, மானிப்பாய். 1775

### பயிற்சி

மத்திய கிழக்கு நாடுகளில் கட்டிட வேலைகளுக்குத் தொழிலாளர் தேவை. Diploma in Building Technology பயிற்சி விரைவில் ஆரம்பமாகின்றது. National Institutes 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம், 1792

வெல்டிங் (Electric Arc & Gas) இலெக்றிக் வயறிங், றேடியோ (Transistor), Auto Electricians Certificate, Diploma in Building Technology முதலிய பயிற்சிகள், வெளிநாட்டு முறையில் நடாத்தப்படும். ஆங்கிலமும் முதலுதவிப் பயிற்சியும் இலவசம். National Institutes, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 1791

### சிற்பாசாரி தேவை

தேர் வேலை செய்த அனுபவமுள்ள ஆசாரிதேவை. யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்பநிலையத்திற்கு நாலடி விட்டமுள்ள வட்டமான சின்னம் (Crest) ஒன்று செய்வதற்காக இவ்வேலையை பாரமேற்கக்கூடியவர் பின்வரும் விலாசத்தைத் தொடர்பு கொள்ளவும்.

அதிபர்,
யாழ்ப்பாணக்கல்லூரி
தொழில்நுட்பநிலையம்,
வட்டுக்கோட்டை.
1794



### அந்தியஸ்டி

1979—3—2 ஆகிய இன்று

அமரர்
இ. வன்னியசிங்கம்
(சிங்கர்)

தோற்றம்: 1949-2-23
மறைவு: 1979-1-31

எமது அன்பின் உருவாகவும், பண்பின் செயலாளுகவும் பாரில் வள்ளலைப் போலவும் இருந்து எம்மை விட்டு மறைந்தும் மறையாத நினைவுடன் வாழும் உமது தந்தை தாயார் சகோதரர்கள் மற்றும் மைத்துனர்கள் சுற்றத்தார் அனைவரும் உமது ஆத்மா சாந்திக்கு இறைவனை வேண்டுகிறோம்.

பொ. இராசரெத்தினம்
தம்பதிகள்
1798

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

# எஸ்.பி. சாமி அன் கொம்பனி

193, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7025

**J. L. மொறிசன் சன் அன் ஜோன்ஸ் லிமிட்.**

ஸ்தாபனத்தாரின் விவசாய இரசாயனப் பொருட்களுக்கு வடபகுதி ஏக விநியோகஸ்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

உங்களுக்குத் தேவையான

∵ மொறிசிட் ∵ எலோரால் ∵ 34 டி. பி. ஏ.
∵ றேகோர் ∴ மன்கோசெப் ∵ எம். சி. வி. ஏ.
∴ மொறெக்ஸ் ∵ குப்றுல் ∵ கொம்பிளசால்

ஆகிய விவசாய இரசாயனப் பொருட்களுக்கு எம்முடன் தொடர்புகொள்ளவும்.

# மக்கள் கருத்து

## யாழ்ப்பாண உதைபந்தாட்டப் பிரதிநிதியார்?

இதுவரைகாலமும் இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தில் யாழ்ப்பாணத்தின் பிரதிநிதியாக உதைபந்தாட்டத்தில் ஈடுபாடு கொண்ட யாழ்ப்பாண வாசி ஒருவரே தெரிவு செய்யப்பட்டுவந்தார். விதிவிலக்காக யாழ்ப்பாண உதைபந்தாட்டத்தரமுயர உழைத்தவரும் முன்னேற்றத்தில் ஆர்வம் காட்டுபவருமான கொழும்புவாசி ஒருவர் தெரியப்பட்ட சந்தர்ப்பம் எப்போதாவது இருந்ததுண்டு.

ஆனால் எதிர்வரும் வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்கு யாழ்ப்பாண உதைபந்தாட்டச்சங்கம் யாழ்ப்பாண வாசனையேயறியாத ஒருவரைப் பிரதிநிதியாகச் சிபார்சு செய்திருப்பதாகத் தெரிகிறது. உதைபந்தாட்டத்தில் ஊக்கமுடைய ஒருவருமே இல்லையா? அக்கறையோடு எங்கள் நலனைக்கண்காணிக்க ஒருவரும் முன்வரவில்லையா? பிறநாட்டுக்கோஷ்டிகள் வருகைதரும்போது யாழ்ப்பாணம் அலட்சியப்படுத்தப்படுகிறது என்று கூக்குரலிடுவதில் அர்த்தமுண்டா? இப்படியான போக்கினால்தான் 46 கழகங்கள் அங்கம் வகித்த யாழ்ப்பாணச் சங்கம் தேய்ந்து 12 கழகங்களுடன் மட்டும் இயங்குகிறது.

உதைபந்தாட்ட விசிறிகள் அனைவருக்கும் இச்சங்கத்தின் நடவடிக்கை வெறுப்பையும் அதிருப்தியையும் கொடுத்துள்ளது.

நிவர்த்தி செய்வார்களா?

க. வயிரவநாதன்
கொக்குவில்.

## பூநகரி மகா வித்தியாலயத்திற்கு பாடசாலை பஸ் சேவை

மிகவும் பின்தங்கிய பூநகரிப் பகுதிக்கு ஒரே ஒரு மகாவித்தியாலயமே வாடியடி என்னுமிடத்தில் இருக்கிறது. இதற்கு மிகத்தூர இடங்களான கறுக்காய்தீவு, ஞானிமடம், செட்டியகுறிச்சி போன்ற கிராமங்களிலிருந்து வரும் சுமார் நூறு மாணவர்கள் ஐந்துமைல் தூரத்தை, பஸ்சேவை இல்லாததால், நடந்து செல்லவேண்டிய நிலையில் இருக்கின்றனர். மாணவர்கள் நாளொன்றில் சுமார் பத்து மைல் தூரத்தை நடக்கின்றனர். இந்த அசௌகரியங்கருதி பல மாணவர்களை, குறிப்பாக பெண் பிள்ளைகளைப் பெற்றோர் பாடசாலைக்கு அனுப்பாது மறித்துவிட்டனர். இதனால் பின்தங்கிய எமது பகுதியின் முன்னேற்றம் மேலும் பின்னடைவதோடு, படிப்பறிவற்ற ஓர் இருண்ட சமுதாயம் எதிர்காலத்தில் உருவாகவும் வழிவகுக்கும்.

மேற்படி மாணவர்களுக்கெனபாடசாலைக்குப்போய்வர இருதடவை பஸ்சேவை ஒழுங்குபடுத்தப்படுவது மிக அவசியமான பணியாகஉள்ளது. இது விடயத்தில் வடபிராந்திய இ. போ. ச. கவனம் எடுக்குமென நம்புகின்றோம். வீதிகள் பஸ் ஓடக்கூடிய விதத்தில் மராமத்துப் பகுதியால் நன்கு செப்பனிடப்பட்டுள்ளன என்பதையும் மேலிடத்தின் மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறோம்.

கா. கார்த்தியேசு
செயலாளர்
கறுக்காய்த்தீவு கி. அ. ச.
பூநகரி.

0 0 0

## இ. போ. சபை கவனிக்குமா?

இன்று நமது நாட்டின் பல பாகங்களிலும் நிலவிவரும் பிரச்னை சில்லறைக் காசுத் தட்டுப்பாடென்பது யாவரும் அறிந்ததொன்று. இதனால் நாளாந்த பயணம் மேற்கொள்ளும் பிரயாணிகளாகிய பொதுமக்கள் பலரும் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுகிறார்கள். 5 சதம் 10 சதம் தட்டுப்பாடென்று கூறிக்கொண்டு சில்லறை கிடைக்கும் நேரத்திலும் கொடுக்காது இதனைத் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்துகின்றனர் சில நடத்துநர்கள்.

40 சதத்துக்கு 50 சதமும், 60 சதத்துக்கு 75 சதமும், சில வேளை 60 சதத்துக்கு 1-00 ரூபாவும் பெற்றுக்கொண்டு மிகுதிப் பணத்தைப் பற்றி எவ்வித கரிசனையும் கொள்ளாது இருப்பது சில பேருந்து நடத்துநர்களுக்கு இயல்பாக அமைந்துவிட்டது. எனவே இதற்கு மாற்று மருந்தாக 5, 10 சத முத்திரைகளை சில்லறைக்குப் பதிலாக வழங்கலாம். முத்திரை யாவருக்கும் பயன்படக்கூடியதும் பெறுமதிவாய்ந்ததுமாகும்.

பூ. ஆறுமுகம்
மட்டுவில் வடக்கு.

## சாயிசபையின் சிவராத்திரிவிழா

[யாழ்ப்பாணம்]

சத்திய சாயி யாழ். கிளை சிவராத்திரி விழா யாழ். ரசிக ரஞ்சன சபா மண்டபத்தில் நடைபெற்றது.

திருமதி சரஸ்வதி பாக்கியராசா தலைமையில் பஜனைக் கோஷ்டியினரின் பக்திப் பாடல்கள் இடம்பெற்றன.

முத்தமிழ் செல்வி ராதா சோமசுந்தரம் லிங்கோற்பவமூர்த்தி பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்தினர். [பரந். நி]

## பாலைதீவு உற்சவம்

[யாழ்ப்பாணம்]

சரித்திரப் பிரசித்தி வாய்ந்த பாலைதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 27ம் திகதி ஆரம்பமாகியது இம்மாதம் 4-ம் திகதி பெரிய பாட்டுப் பூசையுடன் உற்சவம் நிறைவுபெறும்.

உற்சவத்தில் கலந்துகொள்ளும் மக்களின் நலன் கருதி சுகாதார வசதிகளுக்கு வேண்டிய ஒழுங்குகளையாழ்ப்பாண சுகாதாரத் திணைக்களம் செய்துள்ளது குருநகர், நாவாந்துறை போன்ற பகுதிகளிலிருந்து நடாத்தப்பட்டுவரும் விசேஷ படகுச் சேவைகள் யாவும் பொலிசாரின் கண்காணிப்புடன் நடாத்தப்பட்டு வருகின்றது. [கை]

## ஆலயசபை உறுப்பினர்

[புலோலி]

பருத்தித்துறை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமிகோவில் பரிபாலன திருப்பணிச்சபையின் அங்கத்தவராக திரு சரவணமுத்து இராசேந்திரம் தெரிவு செய்யப்பட்டார் அண்மையில் திடீர் மரணமடைந்த அதிபர் திரு சி. சி. கணபதிப்பிள்ளையின் இடத்திற்கு திரு இராசேந்திரம் தெரிவு செய்யப்பட்டார். [அ]

# "தேர்தலும் விடுதலை இயக்கமும் சேர்ந்து இயங்க முடியாது

## கூட்டணியுடன் மோதுவது எமது நோக்கமல்ல" என்கிறார் சந்ததியார்

[பண்டத்தரிப்பு]

'தேர்தலுக்கு அப்பால் நின்று தமிழ் மக்களின் விடுதலை உணர்வைத் தளரவிடாது நிலை நிறுத்தவும், பிரதேச வேறுபாடுகளையும், சாதி வேறுபாடுகளையும் களைந்து ஐக்கியத்தை ஏற்படுத்தவும் தமிழ் இளைஞர் பேரவை பாடுபட்டு வருகின்றது. தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் மோதுவதோ அல்லது ஒற்றுமையைச் சிதைப்பதோ எமது நோக்கமல்ல. இனவிடுதலையே எமது அடிப்படை இலட்சியமாகும்'

இவ்வாறு தமிழ் இளைஞர் பேரவை அமைப்புச் செயலாளர் திரு. த. சந்ததியார் பண்டத்தரிப்பு தமிழ் இளைஞர் பேரவை கிளையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார். வடலியடைப்பு ஐயனார் ஆலய முன்றலில் பண்டத்தரிப்பு தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளர் திரு. பொ. கனகசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் திரு. சந்ததியார் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

'விடுதலை என்பது பரிபூரணமானதொரு போராட்டத்தின் மூலமே கிடைக்க முடியும் என்று இளைஞர் பேரவை கருதுகிறது. தேர்தல்களில் ஈடுபடுவதினால் எமது சக்தி வீணாகிறதே தவிர விடுதலையை நோக்கித் துரிதமாகச் செல்பட முடியாத நிலை ஏற்படுகிறது. இதனாலேதான் தேர்தல்களில் தமிழ் இளைஞர் பேரவை ஈடுபடுவதில்லை என்றும், எந்த அரசியல் கட்சியிலும் அங்கத்துவம் வகிப்பதில்லை என்றும் தீர்மானித்தோம். தேர்தலும் விடுதலை இயக்கமும் ஒன்று சேர்ந்து செயலாற்ற முடியாது! தமிழ் மக்களினதும் தமிழ் இளைஞர்களினதும் விடுதலை உணர்வுகள் காலத்திற்கு காலம் வரும் தேர்தல்களினால் மங்கி மந்த நிலை ஏற்படுவதற்கு நாம் இடம் வைக்கக்கூடாது. திட்டங்களைத் தயாரித்து மக்களை விடுதலைப் போராட்டத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டியவர்கள் கேளிக்கைகளிலும், விழாக்களிலும் கலந்து கொள்வதிலும் வேறு விஷயங்களிலும் தங்கள் நேரத்தைச் செலவு செய்து வருவது கவலையளிப்பதாகஉள்ளது

'நாங்கள் எந்தக் கட்டத்திலும் இனத்தின் ஒற்றுமையைச் சிதைப்பதற்கு முற்படமாட்டோம். இனவிடுதலைக்காக எம்மை அர்ப்பணித்துப் பணியாற்றுவதே எமது குறிக்கோளாகும்.'

வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளர்கள் திரு. ரி. இராசலிங்கம், திரு. ஆ. சேயோன் உட்படப் பலர் உரையாற்றினார்கள். இளைஞர் பேரவை பற்றிக் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு திரு. சந்ததியார் பதிலளித்தார்.

## இன்று முதல்வெள்ளி

## திருப்பாடுகளின் தியானம் 1

தவக்காலத்தில் கிறிஸ்தவ உலகு அடியெடுத்து வைத்திருக்கும் இந்நேரத்தில் இறைவனின் ஆசீரை பெறுவதெப்படி என்பது பற்றி கிறிஸ்து பெருமான் கூறியவைகளைச் சிந்திப்போம். "இறுதி நாளில் மனுமகன் அரசனுக்குரிய தோரணையில் வனதூதர்கள் புடைசூழ அரியணையில் வந்தமர்ந்ததும் உலகமக்கள் அனைவரும் அவர் முன்பாக சேர்க்கப்படுவர். அச்சமயம் இடையன் செம்மறிகளையும் ஆடுகளையும் இரண்டாகப் பிரிப்பதுபோல அவரும் உலக மக்களை தன் வலதுபுறமாகவும் இடப்புறமாகவும் பிரிப்பார். பின்னர் வலப்புறத்திலிருப்போரைப் பார்த்து "என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே வாருங்கள், வந்து உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் செய்யப்பட்டிருக்கும் பரலோக இராஜ்யத்தை சுவீகரித்துக் கொள்ளுங்கள் ஏனெனில் நான் பசியாக இருந்தேன், நீங்கள் உணவளித்தீர்கள். தாகமாயிருந்தேன் பானம் அளித்தீர்கள். நான் அந்நியனாக வந்தபோது உங்கள் இல்லங்களில் என்னை வரவேற்று உபசரித்தீர்கள். ஆடையின்றி நிர்வாணமாக இருந்தபோது ஆடையளித்தீர்கள். நான் நோயுற்றிருக்கையில் என்னைப் பராமரித்தீர்கள். சிறைப்பட்டிருக்கையில் சந்தித்தீர்கள்" என்பார். அப்போது வலது பக்கமிருப்போர் மறுமொழியாக "ஆண்டவரே எப்போது நீர் பசியாக இருக்கையில் உமக்கு நாம் உணவளித்தோம், அல்லது தாகமாயிருக்கையில் நாம் பானமளித்தோம். எப்போது நீர் அந்நியனாக வந்தபோது உம்மை நம் வீடுகளில் வரவேற்று உபசரித்தோம் நீர் ஆடையின்றி இருந்தபோது ஆடையளித்தோம் எப்போது நீர் நோவாய்ப்பட்டிருக்கையில் பராமரித்தோம் சிறைப்பட்டிருக்கையில் சந்தித்தோம்" என்பர். அதற்கு அரசன் மறுமொழியாக நான் உங்களுக்குச் சொல்கிறேன் என்னுடைய சகோதரர்களில் ஒருவனுக்கு இவைகள் தேவையாக இருந்தபோது நீங்கள் செய்தபோதெல்லாம் எனக்கே இவைகளை நீங்கள் செய்தீர்கள்.

தொகுப்பு :
பற்றிமாகரன்

## சங்கானை ப. நோ. கூ. சங்கம் முன்மாதிரி

[சங்கானை]

இவ்வருட வரவு-செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்ட ஊழியர்களின் சம்பள உயர்வை வழங்கி சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒரு முன்மாதிரியை நிலைநிறுத்தியுள்ளது.

சங்கானைக் கூட்டுறவு ஊழியர் சங்கக் கிளையினர் விடுத்த கோரிக்கையை அடுத்தே நிர்வாகத்தினர் சம்பள உயர்வை வழங்க முன்வந்துள்ளனர்.

இதுவரை எந்தச் சங்கமும் இச்சம்பள உயர்வை வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. [கு]

## நீர் விநியோகத் திட்டம்

[சித்தன்கேணி]

வட்டுக்கோட்டை கிராமசபை நீர் விநியோகத் திட்ட அங்குரார்ப்பண விழா இம்மாதம் 5 ம் தேதி, சங்கரத்தை வீதியில், சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு மு. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்

வட்டுக்கோட்டை எம் பி திரு தா திருநாவுக்கரசு, வடபிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு அன்ரன் அல்பிரட் வடபிரதேச நீர் விநியோக முகாமையாளர் திரு ச. பாலமுத்துசிவம், யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு. மு. ஜெகநாதன் ஆகியோர் கலந்துகொள்வார்கள். [க]

## இன்றைய பலன்

மாசிமாதம் 18-ம் திகதி

(2-3-1979)

வெள்ளிக்கிழமை

**மேடம்:** அதிக முயற்சி எடுத்தாலும் அற்பலாபமே கிடைக்கும், கொடுக்கல் வாங்கல் மூலம் ஏமாற்றம் அடையக்கூடும், எதிலும் முன்னெச்சரிக்கை நன்று.

**இடபம்:** பிறருக்கு உதவுவதில் முன்னிற்பீர்கள், பேச்சு வன்மையால் நன்மதிப்பைப் பெறுவர், சிறப்பான தினம்.

**மிதுனம்:** தூக்கம் விழிகளைத் தழுவமறுக்கும், கடந்தகால எண்ணங்கள் அலைமோதும், சகோதரவழியால் சஞ்சலப்படக்கூடிய செய்தி கிடைக்கும்.

**கடகம்:** நண்பர்கள் உதவுவதற்கு முன் வருவர், குடும்ப வாழ்க்கையில் சுமுகமான நிலை தென்படும், தாய்வழிப் பெருமைக்கு இடமுண்டு.

**சிங்கம்:** மற்றவர்களின் இன்னல்கண்டு இரக்கம்காட்டுவீர்கள், புத்திரசுகத்திற்கும் இடமுண்டு. தொழிற்றுறையில் வெற்றிக்கிடமுண்டு, சுபநாள்.

**கன்னி:** தூரத்துப்பயணம் துயரம் தரலாம், வருமானத்தில் வீழ்ச்சிதென்படும், வைத்தியச் செலவுக்கிடமுண்டு, சுகாதாரத்தைப் பேணிநடக்கவும்.

**துலாம்:** களஸ்திரவழிப் பெருமைக்கிடமுண்டு, காதலர்களாயின் மகிழ்ச்சியுண்டு, திடீர்ப் பயணமும் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** பிரச்னைகள் மேலும் சிக்கலாகும். கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருக்கவும், உடல் நலனில் அதிக கவனம் செலுத்தவும்

**தனுசு:** பெருமையுடன் தலைநிமிர்ந்து வாழுவீர்கள், பிதாவழித்தனமும் சேரும், சிலருக்கு அரசியலிலும் ஆர்வம் பிறக்கும்.

**மகரம்:** பயனுள்ள சந்திப்பு இன்று நிகழும், இருப்பிட மாற்றத்துக்கான ஆலோசனைகளும் உருவாகும், அறிஞர் ஆதரவும் உண்டு

**கும்பம்:** எதிர்பாராத வகையில் ஆதரவு பெருகும், தொழில்முறைகளை மனம் நாடும் வரவிலும் திருப்தி காணப்படும்,

**மீனம்:** குடும்பக் கவலை அதிகரிக்கும், பொருள் விரயத்துக்கு இடமேற்படும், அற்ப விடயத்திற்கும் ஆத்திரப்படுவீர்கள், அடக்கம் வேண்டும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# லாங்டொன் நகரைச்சூற்றி பீரங்கி, டாங்கிப் போர்!

## பதிலடியில் 1600 சீனர்கள் பலி! எனினும் கடும்போர் தொடர்கிறது

ஹனோய், மார்ச் 1

வியட்நாமின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த லாங்டொன் நகரைச் சுற்றி சீன வியட்நாம் படைகள் பீரங்கிகள், தாங்கிகள் சகிதம் கடும் சமர் புரிந்து வருவதாகவும் இந் நகரம் இப்போது எந்த நாட்டினதும் கட்டுப்பாட்டுக்குள்ளும் இல்லையென்றும் தெரிவிக்கப்பட்டது.

வடகிழக்கு வியட்நாமில் உள்ள இம் மாகாண நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை கடும் சண்டை செய்த சீனப்படைகளை வியட்நாம் படைகள் விரட்டியடித்ததாகவும் இம் மோதலில் மட்டும் 1600 சீனர்கள் பலியாகினர் என்றும் ஹனோய் வானொலி அறிவித்தது.

3 இலக்குகளில் சீனப்படைவும் இம்மோதலுக்கு வியட்நாமின் மூன்று படைப்பிரிவுகளை நாம் வீரர்கள் பதிலடி அமைந்து போர்செய்ததாக கொடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

### லாங்டொன் வீழ்ந்தால்.....

ஹனோயிலிருந்து 185 மைல் தொலைவிலிருக்கும் லாங்டொன் நகரம் வீழ்ச்சி அடைந்தால் அடுத்து ஹனோய் சீனப்படைகளிடம் இலகுவாக வீழ்ச்சிவடைந்துவிடும் என்று அஞ்சப்படுகிறது. [இ]

## சீனாவை எதிர்த்துப் போரிட கியூபா மீண்டும் விருப்பம்

### வியட்நாமுக்குகம்பூச்சியாவும் அறிவிப்பு

ஹனோய், மார்ச் 1

சீன—வியட்நாம் போரில் வியட்நாமுக்கு ஆதரவாக சீனாவை எதிர்த்துப் போராட கியூபாவும் கம்பூச்சியாவும் விருப்பம் தெரிவித்துள்ளன.

வியட்நாமுக்கு ஆதரவாகத் தமது படைகளை உடனடியாக அனுப்பத் தாம் தயாராக உள்ளதாக இருநாடுகளும் வியட்நாமுக்கு அறிவித்துள்ளன.

இந்த அறிவிப்பை கியூபா 2வது தடவையாக வெளியிட்டுள்ளது. [இ]

## றொடீஷிய பாராளுமன்றம் கலைக்கப்பட்டது

### ஏப்ரலில் பொதுத்தேர்தல்

சாலிஸ்பரி, மார்ச் 1

றொடீஷியாவில் எதிர்வரும் ஏப்ரலில் நடைபெற இருக்கும் பொதுத்தேர்தலுக்கு முன்னோடியாக வெள்ளையர் அரசின் பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது.

றொடீஷியாவின் ஆட்சிப் பொறுப்பை பெரும்பான்மை கறுப்பு இனத்தவரிடம் ஒப்படைப்பதென றொடீஷிய இடைக்கால அரசு தீர்மானித்ததை அடுத்தே பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது.

றொடீஷியாவில் சிறுபான்மை வெள்ளை இனத்தவர்கள் கடந்த 81 ஆண்டுகளாக பெரும்பான்மை கறுப்பு இனத்தவரை ஆட்சி செய்து வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. [இ]

## தீவிரஇடதுசாரிக் குழுக்களின் நடவடிக்கை நீடித்தால் ராஜினமா செய்வேன்

### ஈரான் பிரதமர் அறிவிப்பு

தெஹ்ரான், மார்ச் 1

ஈரானில் தீவிரஇடதுசாரிக் குழுவினரின் நடவடிக்கைகள் தொடருமானால் தாம் தமது பதவியை ராஜினமாச்செய்யப்போவதாக ஈரான் பிரதமர் டாக்டர் பஸார்கான் தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களுக்கு வானொலியில் உரைநிகழ்த்தியபோதே டாக்டர் பஸார்கான் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:

இடதுசாரிக் குழுக்கள் வெளிநாட்டுத் தூதரகங்களைத் தாக்கி குழப்பம் விளைவிக்கிறார்கள். பலரை சிறையில் தள்ளுகிறார்கள். இராணுவம் அவசியம் இல்லை. புரட்சி இன்னமும் பூரணத்துவம் அடையவில்லை என்கிறார்கள். இந்நிலை தொடருமானால் எனது பதவியை ராஜினமாச் செய்வதைவிட வேறு எதுவும் கிடையாது.

### எண்ணை ஏற்றுமதி

இம்மாதம் 5ம் திகதி திங்கட்கிழமை முதல் ஈரானிலிருந்து மீண்டும் எண்ணை ஏற்றுமதி செய்யப்படும். இதுவரை எண்ணை ஏற்றுமதியை மேற்கொண்டுவந்த வெளிநாட்டுக் கம்பனிகள் உடனடியாக தத்தமது நாடுகளுக்குத் திரும்ப வேண்டும்.

ஈரானிய மக்கள் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளின் வலையில் விழக்கூடாது என்றும் டாக்டர் பஸார்கான் கோரிக்கை விடுத்தார். [இ]

## வியட்நாம் மண்ணில் ஒரு அங்குலம் கூட சீனவுக்குத் தேவையில்லை

பீகிங், மார்ச் 1

வியட்நாம் மண்ணில் ஒரு அங்குலம் கூட சீனவுக்குத் தேவையில்லை.

இவ்வாறு சீன உதவிப்பிரதமர் திரு. டெங்சியாவோ பெங் தெரிவித்துள்ளார்.

சீனப் படையினரின் தற்போதைய நடவடிக்கைகள் பூர்த்தியானதும் அப் படைகள் சீனவுக்குத் திரும்பிவிடும் என்றும் அவர் கூறினர். [இ]

## கிணற்றில் மரணமான வயோதிபமாதின் முடிச்சில் இருந்த நகைகள் எங்கே?

(முல்லைத்தீவு)

கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட மூதாட்டியின் சேலை முடிப்பிலிருந்து நகைகள் மாயமாக மறைந்துவிட்டதாம்,

கிணற்றில் விழுந்து மரணமான முள்ளியவளையைச் சேர்ந்த திருமதி பார்வதி சுப்பிரமணியத்தின் மரணவிசாரணையின் போது சாட்சியமளித்த அவரதுமகள் திருமதி சின்னச்சி இத்தகவலைத் தெரிவித்ததைத் தொடர்ந்து இது சம்பந்தமாக விசாரணை நடத்துமாறு மரண விசாரணை அதிகாரி பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

காலஞ்சென்றவர் கண் பார்வை இழந்திருந்ததால் அவருக்கு சத்திரசிகிச்சை செய்யப்பட்டபோதிலும் குணமாகாததால் மனமுடைந்திருந்தார். சம்பவதினத்திற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் தனது நகைகளைச் சேலை முடிப்பில் முடிந்து வைத்ததாகவும், ஆனல் கிணற்றிலிருந்து அவரது சடலம் எடுக்கப்பட்டபோது அவை காணப்படவில்லை என்று காலஞ்சென்றவரின் மகள் சின்னச்சி தமது சாட்சியத்தில் தெரிவித்தார்.

விசாரணை நடாத்திய மூள்ளியவளை திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு.கே தியாகராசா பொலிசாரைவிசாரணை நடத்துமாறு பணித்ததோடு சடலத்தைத் தகனம் செய்யாமல் பாதுகாப்பாக அடக்கம் செய்யுமாறும் உத்தரவிட்டுள்ளார். [அ]

## உதவி அதிபர் தாக்கப்பட்டாராம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு வெளியிலுள்ள பிரபல கல்லூரி ஒன்றில் உதவி அதிபராகக் கடமையாற்றும் ஒருவரை அதே கல்லூரியின் அதிபர் தாக்கியதாக மேலிடத்துக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது.

தாக்குதல் சம்பவம் நடைபெற்ற கல்லூரியில் அக் கல்லூரி ஆசிரியர்களுக்கான கூட்டத்தின்போதே இச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இவ்விடயம் பற்றி யாழ் கல்வித்திணைக்கள உயர் அதிகாரிகள் பூரண விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். [கோ- நி]

## சரண்சிங்கின் முதலாவது பட்ஜட்

புதுடில்லி, மார்ச் 1

78—79ம் ஆண்டுக்கான பட்ஜட் இந்திய நிதியமைச்சர் திரு. சரண்சிங் நேற்று இந்திய பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இந்தியஉள்துறைஅமைச்சராக இருந்த திரு. சரண்சிங் நீண்ட அரசியல் நெருக்கடிக்குப்பின் அண்மையில் நிதியமைச்சராகப் பதவி ஏற்றபின்னர் சமர்ப்பித்த முதலாவது பட்ஜட் இதுவாகும். [இ]



## நினைவுதினம்

[பரந்தன்]

சாவகச்சேரி மாவட்ட சாரணியத்தலைவர் நினைவுதின விழா சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி விளையாட்டுமைதானத்தில் யாழ் மாவட்ட சாரணிய ஆணையாளர் திருமதி ஆர் இராசநாயகம் தலைமையில் நடைபெற்றது.

சாரணியர் கடைப்பிடிக்க வேண்டிய சீர், அணிநடை, அணிவகுப்பு, ஒழுங்கு, காலந்தவறாமை, சுறுசுறுப்பு, ஊக்கம், உத்தரவுக்கமைதல் பாசறை அமைத்தல் மற்றும் சமூகசேவை பற்றி சாரணிய தலைவி செல்வி ராதாசோமசுந்தரம் விளக்கிக் கூறினார்.

குருளை தலைவர் திரு. செல்லையா, சாவகச்சேரி மாவட்ட உதவி ஆணையாளர் திருமதி உவாட்வேத் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர். [க]

## உதைபந்தாட்ட லீக் நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் வருடாந்தப் பொதுக்கூட்டம், அண்மையில் டாக்டர் ஜே. பீ. வி. பீலிப்ஸ் தலைமையில், யாழ். துரையப்பா விளையாட்டரங்கின் மண்டபத்தில் கூடிய போது, மேற்படி லீக்கின் கடந்தவருட உத்தியோகத்தர்களே மீண்டும் கூடுதலாகத் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

புதுவருட உத்தியோகத்தர்கள் விபரம் வருமாறு:

தலைவர்: டாக்டர் ஜே. பி. வி பிலிப்ஸ், உப-தலைவர்கள்: திருவாளர்கள் எம். அருமைத்துரை, ஏ. யோண், எஸ். சிவகுரு, ஈ. கே. குமரையா, ஓ. டி. மனியல், ஜனுப் எம். இஸ்ஸடீன், காரியதரிசி: திரு. ஏ தேவராசா, உப-காரியதரிசி: திரு. எஸ். என் ஜே அன்ரனிப்பிள்ளை, தனாதிகாரி: திரு. எஸ். தாஸீவியஸ். (அ)

## இடமாற்றம் ரத்து

(யாழ்ப்பாணம்)

வரணி மகாவித்தியாலய அதிபர் பண்டித வித்துவான் பொன் கந்தையனார் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

வரணி மகாவித்தியாலயத்திலிருந்து கச்சாய் அரசினர் பாடசாலைக்கு இவருக்கு மாற்றம் கிடைத்திருந்தது, இப்போது இவரது இடமாற்றம் ரத்துச்செய்யப்பட்டுள்ளது ]பரந்- க]

வல்லைநகைக்கொள்ளை:

## கிளிநொச்சியில் ஒருவர் கைது

(புலோலி)

பட்டப்பகலில் வல்லை பஸ் நிலையத்தில் வைத்து இளம் பெண்ணின் தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிசார் சந்தேகத்தின்பேரில் கிளிநொச்சியில் வைத்து ஒருவரைக்கைது செய்துள்ளனர்.

இத்துணிகரக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிசார் தொடர்ந்தும் துரிதபுலன் விசாரணை மேற்கொண்டுவருகின்றனர். (அ)

## இன்று கையளிப்பு

[புலோலி]

பருத்தித்துறைத் தேர்தற் தொகுதியில் கற்கோவளத்தில் கட்டப்பட்ட ஐந்து வீடுகளும் இன்று வெள்ளிக்கிழமை வளங்கப்படவுள்ளன.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் தலைமையில் நடைபெறும் இக்கையளிப்பு நிகழ்ச்சியில் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் யாழ். மாவட்ட வீடமைப்புத் திணைக்கள சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு எஸ். ராமநாதன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். [அ]

## பிரிவுபசாரம்

[புலோலி]

வல்வை சிதம்பராக் கல்லூரியில் கடமையாற்றி கம்பர்மலை அரசினர் மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர் திரு ஜே. ந. பொன்னையாவுக்கு ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. செ. யோகச்சந்திரன் தலைமையில் பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது

ஆசிரியர்கள் திருவாளர்கள் சு. பழனிவடிவேல், எஸ் செல்வநாயகம், சுவாமிநாதன், இராசலிங்கம், இராசேந்திரா, குழந்தைவேல், பூபாலசிங்கம் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். [அ]

# நாடக அரங்கக்கல்லூரி அளிக்கும் 'கோடை'

நாடகத்துக்கு ஒரு கல்லூரியா? சொல்லித்தெரிய வைக்கும் கலையா நாடகம்? இதுவென்ன சித்திரமா? சிற்பமா? சங்கீதமா? நாட்டியமா? இல்லையேல் பொருளியல், புவியியல், குடியியல் வரலாறு போன்ற கலைப் பாடமா? அல்லது பௌதிகம், இரசாயனம், உயிரியல்சார்ந்த விஞ்ஞானமா? கற்றவர் கூறக்கைகட்டி நின்று நாம் கேட்பதற்கு!

நாடகத்துக்கு ஒரு கல்லூரி என்றதும் இத்தகைய கேள்விகள் எம்முள்ளத்தில் எழுவது இயல்பே. விடைகாணவிளைவதே எம் கடன்

உலகில் உள்ள அத்தனை கலைகளும், நெறிகளும் விஞ்ஞானங்களும் மெய்ஞ்ஞானங்களும் மனிதனை மேம்படுத்துவதற்காகவே வகுக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தினதும் துணைகொண்டு மனிதன் தன் வசதிகளை வளர்த்துக்கொண்டு தன்னை உயர்த்திக் கொள்கிறான்; தான் உயரவில்லை.

மனிதனில் இருக்கின்ற 'மனிதனை' வளர்ப்பதற்கே நாடகப்பயிற்சி; அதற்கொரு நாடகக்கல்லூரி. தன்னை மனிதனுக்கிக்கொண்ட மனிதன், தனது உள, உடல் ஆற்றலால் பிறரையும் மனிதராக்க உதவுவதற்கு அம்மனிதனுக்கு அளிக்கப்படும் பயிற்சியே அரங்கப்பயிற்சியாகும்.

எனவேதான் நாம் ஒரு நாடக அரங்கக்கல்லூரியை ஆரம்பித்துள்ளோம்.

ஓராண்டுப் பயிற்சியின் பயனாக மனிதராக உயர்ந்துள்ள சிலர் அரங்கப் பயிற்சியும் பெற்ற அவையோரை உயர்த்தமுற்பட்டுள்ளனர்.

சொல்லித் தெரியவேண்டியதுதான் நடிப்புக்கலை. ஆனால் சொல்லிக்கொடுத்ததையே மேடையில் செய்வதல்ல நடிப்பு. தானும் அதுபோல் பாவிக்கும் பொல்லாவாள் கோழிகளை உருவாக்குவதல்ல நாடக, அரங்கப்பயிற்சியின் நோக்கம்.

உடலும் குரலுமே நடிகனது கருவிகள். இவ்விரண்டும் தனி ஒருவனது கட்டுப்பாட்டுக்குள் நின்று அவனது கற்பனைத் திறத்துக்கு ஏற்றவண்ணம் பிசகாது பணிபுரியும் போதுதான் சிறந்த நடிகன் தோன்ற முடியும்.

அத்தகைய, நடிகர்களை உருவாக்கும் உயர்பணியிலேயே நாடக அரங்கக்கல்லூரி தனது பொழுதைப் பயன்படுத்துகிறது.

பயிற்சி, பயிற்சி, பயிற்சி. இதுவே குரலுக்கும், உடலுக்கும், உள்ளத்துக்கும் இன்றியமையாது தேவைப்படுவது. அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்

தமிழுக்கு வாய்த்த முழு நீளப்பா நாடகமான மஹாகவியின் ''கோடை'' இன்று யாழ்ப்பாணத்திலே முதல் முறையாக மேடையேறுகிறது இந்த நாடகத்தை நாடக அரங்கக் கல்லூரி தயாரித்தளிக்கிறது.

விடுதலை உணர்வு, சாதாரண மக்களிடையே எவ்வாறு கொளுந்துவிட்டெரிந்தது என்பதை மஹாகவி நுணுக்கமாகக் காட்டும் நாடகம் இது.

ஒரு கலைஞனின் வாழ்க்கையில் ஒரு நாளில் நடைபெறும் நிகழ்ச்சியைமாத்திரமே சித்தரிக்கும் கோடை, நம் நாட்டு ஏழைக் கலைஞர்களின் வாழ்க்கையையும், அவர்கள் நிலையையும், சமூக அந்தஸ்தையும், அதிகாரப் பிடியின் இழுப்புகளும் அசைப்புகளும் அவர்களைப் பாதிப்பதையும், அவற்றையும் மீறிக் கலைஞர்கள் தம் தனித்துவத்தை நிலைநாட்டுவதையும் சித்தரிக்கிறது.

நம் நாடு கலைகளிலும் வளங்களிலும் எவ்வாறு மிளிரவேண்டும் என்பதை பஞ்சையர் எனும் பாத்திரமூலம் இலட்சியவேட்கையாக மகாஹவி தமது அபிலாசையை வெளிக்கூறும் நாடகம் இது.

யாழ்ப்பாண நாடகமேடைகளில் பெயர்பெற்ற ரீ. எஸ். லோகநாதன், ஏ. பிரான்சிஸ் ஜெனம், ஏ. ரீ. பொன்னுத்துரை, பேர்மினஸ், ஆனந்தராணி, ராஜரட்ணம், சௌரி வேதநாயகம் சண்முகநாதன் ஆகியோரும், தனபாலசிங்கம், செந்தீஸ்வரன் ஆகியோரும் நடிக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் நாடக அரங்கக் கல்லூரியில் கடந்த ஒரு ஆண்டாகப் பயிற்சி பெறுகிறார்கள்.

-"நாடகப்பிரியன்"

## மின்னொளி பெறும் பரு. கிராமங்கள்

(புலோலி)

பருத்தித்துறைத் தொகுதியிலுள்ள பல கிராமப்பகுதிகளுக்கு மின்னிணைப்புச் செய்வதற்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வட்டுவாளை குடியேற்றத் திட்ட மின்னிணைப்பிற்கென 25,000 ரூபாவும், அல்வாய் மேற்கு கிராம மின்னிணைப்பிற்கென 75,000 ரூபாவும், அல்வாய் தெற்கு- அத்தாய் மின்னிணைப்பிற்கென 75,000 ரூபாவும், புலோலி தெற்கு கிராம மின்னிணைப்பிற்கென 50,000 ரூபாவும், வராத்துப்பளை-கற்கோவளம் மின்னிணைப்பிற்கென 50,000 ரூபாவும், மாயக்கைப்பகுதி மின்னிணைப்பிற்கென 50,000 ரூபாவும், பருத்தித்துறைநகரசபைப் பகுதி மின்னிணைப்பிற்கென 1,50,000 ரூபாவும் பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுளது. (அ)

## மலையக இளைஞன் அல்வாய்க் கிணற்றில் பிணமானான்

[புலோலி]

மிளகாய்ச் செடிக்கு நீர் பாச்சுவதற்காக கிணற்றில் நீர் இறைத்துக் கொண்டிருந்த இளைஞன் தவறி கிணற்றுள் விழுந்தமையால் மரணமானார்.

அல்வாய் மேற்கைச் சேர்ந்த வீடொன்றில் பணியாற்றி வந்த கோபால் இராமச்சந்திரன் என்ற றத்தோட்டையைச் சேர்ந்த இளைஞனே மேற்கண்டவாறுமரணத்தைத் தழுவிக் கொண்டவராவார். மரண விசாரணை அதிகாரி திரு. இ. வேலுப்பிள்ளை விசாரணையை மேற்கொண்டார் வல்வெட்டித்துறைப் பொலிசார் சாட்சியங்களை ஆஜர் செய்தனர். பிரேதபரிசோதனை நடத்திய ஊறணி அரசினர் வைத்தியசாலை பிரதம டாக்டர் திரு ராஜேந்திரனும் சாட்சியமளித்தார். விபத்து மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (அ)

## பேச்சை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. பொன்னம்பலம் இப்பகுதி பிள்ளைகள் நலன்கருதி அவர்களுக்கு இலவச கல்வி கற்பிக்க முன்வருவதாக வாக்குறுதி அளித்தார்.

மற்றும் வலி-மேற்கு பெரும்பாக உத்தியோகத்தர் திரு எஸ். தவராசா, திரு. ப நாகராசர், திரு. எஸ். ஜெயபாலன், திரு. கு. சண்முகரத்தினம் ஆகியோரும் உரையாற்றினர். [ஸ்ரீ[


வெல்லி (சாவகச்சேரி)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ரஜனிகாந்த்—ஸ்ரீதேவி
மூன்றுமுடிச்சு

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி—பத்மினி
ராஜபக்தி

Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
Demolition Squad

ராஜா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர்.-ஜெயலலிதா நடித்த
தனிப்பிறவி
[புதிய பிரதி]

மனோகரா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - உஷாநந்தினி
ராஜபார்ட் ரங்கதுரை
(ஈஸ்ட்மன் கலர்) [புதிய பிரதி]

ஸ்ரீதர் (யாழ்நகர்)
இன்று மட்டும்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா நடித்த
உயர்ந்தவர்கள்
நாளை முதல் பிரமிளா
வாழையடிவாழை

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
10-வது வாரம்
போன்: 466
தினசரி 5 காட்சிகள்
10-00, 1-00, 3-45, 6-45, 9-45
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

ராணி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஸ்ரீகாந்த் - லக்ஷ்மி
நடித்த
ஜெயகாந்தனின்
ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்
டைரக்ஷன்: A. பீம்சிங்
4-3-79 முதல் சிவாஜி—வரலட்சுமி நடித்த
நான்பெற்ற செல்வம்

REGAL
NOW SHOWING
Daily at, 4-3, 7-00 & 9-3
HEADLESS HORSEMAN
(color)
தலையில்லாக் குதிரைக்காரனின், சாகசங்கள் நிறைந்த படம்
Next Attraction
ON FRIDAY AT ELEVEN

Shanthi - (Jaffna) Phone-7642
Last few days only
10-30, 2-30, 4-45, 7-00, & 9-30
4th Glorious Week!
SEVEN NIGHTS IN JAPAN
More Suitable for Adults — Eastman Color

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி: 2-00, 6-00&9-30
சனி, ஞாயிறு: 10-00, 2-00, 6-00 & 9-30
கமலஹாசன் — சுஜாதா
அவள் ஒரு தொடர்கதை
(புதிய பிரதி)

றியோ (யாழ். நகர்)
போன்: 7634 தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தமிழ்வேலு
ஆசை அறுபதுநாள்

# "பொதுச்சபையை கூட்டியது இளைஞர் பேரவையை மீண்டும் ஒற்றுமையாக இயங்கவைப்பதற்கே"

## பொதுச்சபை உறுப்பினர்களுக்கு அமிர்தலிங்கம் விளக்கம்

[யாழ்ப்பாணம்]

இளைஞர் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தி கூட்டணியின் அங்கமான இளைஞர் பேரவையை மீண்டும் கட்டுப்பாடாக ஒற்றுமையாக இயங்கச் செய்வதற்கே நாளை இளைஞர் பேரவை அமைப்பு வேலைகளுக்குப் பொறுப்பான பொதுச் சபையைக் கூட்டவுள்ளேன்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைச் செலகத்தில் நாளை நடைபெறவிருக்கும் தமிழ் இளைஞர் பேரவையின் பொதுச்சபை உறுப்பினர்களுக்கு கூட்டணி செயலாளர்நாயகம் திரு ஏ. அமிர்தலிங்கம் அனுப்பியிருக்கும் சுற்றுநிருபத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச்சுற்று நிருபத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

பல்வேறு கட்சிகளாகப் பிளவுபட்டிருந்த தமிழ் இனம் 1972ம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியாக ஒன்றிணைந்து இனத்தின் வரலாற்றில் ஓர் புது அத்தியாயத்தை ஆரம்பித்ததை நீங்கள் அறிவீர்கள். அந்த நேரத்தில் இணைந்த கட்சிகளின் இளைஞர் அமைப்புகளாகத் தமிழரசு வாலிபமுன்னணியும், தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணியும் இயங்கி வந்தன. கூட்டணியின் ஓர் அங்கமாக மாணவர் பேரவையும் இணைந்தது. அரசின் கெடுபிடிகளால் மாணவர் பேரவை இயங்க முடியாது போனதாலும், தனிக்கட்சிகளின் வாலிபமுன்னணிகள் வேற்றுமைவளர்க்கும் என்பதாலும் இவற்றையெல்லாம் ஒன்றிணைத்துக் கூட்டணியின் அங்கமாக தமிழ் இளைஞர் பேரவையை நிறுவும் பொறுப்பு தம்பி சேனாதிராஜாவிடம் விடப்பட்டது. அந்தப்பணியை அவர் செய்து ஓரளவு அமைப்பாக பூர்த்தி செய்த நேரத்தில் 9-3-73 ல் கைது செய்யப்பட்டார்.

அவருடைய இடத்தில் இளைஞர் பேரவை அதைப்பு வேலைகளைப் பொறுப்பேற்ற குழு இரு கூட்டணியின் முழு உதவியோடு உண்ணாவிரதம் முதலியவற்றை நடாத்திவந்தது அக்குழுவில் ஒரு பகுதியினர் ''தனிவழி'' செல்லும் எண்ணத்தை எங்கிருந்தோ பெற்று ''தமிழ்ஈழ விடுதலை இயக்கம்'' என்ற பெயரில் கூட்டணியில் இருந்து பிரிந்து சென்றாலும் த. இ. பேரவை கூட்டணியின் ஓர் அங்கமாக தொடர்ந்து இயங்கிவந்தது. த. வி. கூட்டணியின் புதிய யாப்புத் தயாரிக்கப்பட்ட போது இ. பேரவைப்பிரதிநிதிகளும் அதை ஏற்றுக் கொண்டனர். அந்த யாப்பின் விதிகளின் பிரகாரம் செயலாளர் நாயகமாகியநான் இக் கூட்டத்தைக் கூட்டுகின்றேன்.

ஆரம்பம்முதல் தமிழ் இளைஞர் பேரவைக்கு அலுவலகம், கூட்டணி செயலகத்திலேயே இருந்தது, நிர்வாகச் செயலாளர் சிவமகாராசா, யோகராசா, யோகநாதன் ஆகியோருக்கு கூட்டணியே படியை வழங்கியது. இவையெல்லாம் இளைஞர் பேரவையினர் ஓர் அங்கம் என்பதை தெளிவு,படுத்தும்.

இவற்றைத் தெரிந்தோ தெரியாமலே இன்று சிலஇளைஞர்கள் மீண்டும் 'தனிவழி' முடிவை எடுத்து தமிழினத்தின் ஒரே விடுதலை இயக்கமான கூட்டணியை பலவீனப்படுத்தி இனத்தின் ஒற்றுமையையும் சிதைக்க முற்பட்டிருக்கின்றனர். இது பிளவு மனப்போக்கை தட்டிக்கேட்ட இளைஞர் பேரவை செயற்குழு, பொதுச்சபைஉறுப்பினர் பலர் வெளியேறி இளைஞர்மத்தியில் பெரும் பிளவு உருவாக வழி வகுக்கப்படுகிறது. இதைத் தவிர்த்து இளைஞர் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தித் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அங்கமான இளைஞர் பேரவை மீண்டும் கட்டுப்பாடாக, ஒற்றுமையாக இயங்கச் செய்வதற்கே 3-3-79ல் இளைஞர் பேரவை அமைப்பு வேலைகளுக்குப் பொறுப்பான பொதுச்சபையைக் கூட்டியிருக்கிறேன். இக்கூட்டத்திற்கு வருகைதந்து த இளைஞர்களின் ஒற்றுமையையும் த வி கூ. பலத்தையும் காக்குமாறு வேண்டுகிறேன். [க]

## பேரவை உறுப்பினர்களுக்கு நிர்வாகச் செயலாளர் கடிதம்

[யாழ்ப்பாணம்]

நாளை நடபெறவிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி இளைஞர் பேரவை கூட்டம் தமிழ் இளைஞர் பேரவையின் கூட்டம் அல்லவென்றும், அக் கூட்டத்தில் தமது உறுப்பினர்களை கலந்துகொள்ள வேண்டாமென்றும் தமிழ் இளைஞர் பேரவை நிர்வாகச் செயலாளர் திரு. சொ. யோகநாதன் பேரவை பொதுச்சபை உறுப்பினர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழ்இளைஞர் பேரவையின் பொதுச்சபை25-2-79ல் கூடிய போது, தமிழ் இளைஞர் பேரவையின் பொதுச்சபையைக் கூட்டும் அதிகாரத்தை தமிழ் இளைஞர் பேரவை நிர்வாகச் செயலாளரிடம் வழங்கியுள்ளதுடன், இதற்கு மாறாக யாராவது தமிழ் இளைஞர் பேரவையின் பொதுச் சபையைக் கூட்ட முனைந்தால் மேற்படி கூட்டங்களை நிராகரிப்பதெனவும் தீர்மானித்துள்ளது.

இந்நிலையில் 3-3-79 ல் தமிழர் விடுதலைக் கூட்டணி-இளைஞர் பேரவை கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளதாகவும், மேற்படிகூட்டத்தில் கலந்து கொள்ளும்படியும் தமிழ் இளைஞர் பேரவை பொதுச்சபை உறுப்பினர்களுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியால் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டம் தமிழ் இளைஞர் பேரவையின் கூட்டம் அல்ல என்பதையும், எமது நிர்வாகத்தால் கூட்டப்படவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம், ஆகவே 3-3-79ல் நடைபெறும் தமிழர் விடுதலைக் கூட்டணி-இளைஞர் பேரவை கூட்டத்தில் எமது உறுப்பினர்களைக் கலந்து கொள்ள வேண்டாம் என தயவுடன் வேண்டுகிறோம்.

## பஸ்சேவைபற்றி கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

இராசவீதியூடாக அச்சுவேலிக்குச் சேவையில் ஈடுபட்டுள்ள இரண்டு பஸ்களும் திருப்திகரமாக இல்லாததனால் அடிக்கடி பஸ்சேவை ரத்துச் செய்யப்படுவதால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

இவ்வாறு அண்மையில் வடபிராந்திய இ போ ச. வட்டார முகாமையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற இராசவீதி—அச்சுவேலி பஸ்சேவை பற்றிய கலந்துரையாடலில் பிரயாணிகள் சங்கப்பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இக் கலந்துரையாடலில் வட்டார முகாமையாளர் திரு நா. தியாகராசா, சாலை அத்தியட்சகர் திரு. க. மயில்வாகனம் ஆகியோருடன் பிரயாணிகள் சங்க அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர்.

நிரந்தரமாக ஒரு நல்ல நிலையிலுள்ள பஸ்ஸை சேவையில் ஈடுபடுத்துவதுடன் மேலதிகமாக ஒருபஸ்ஸை காலையிலும் மாலையிலும் தோம்பிலுள்ள கைத்தொழில் பேட்டையிலிருந்து தெற்குப் புன்னாலைக் கட்டுவன் ஊடாக பலாலி வீதிவழியாக யாழ்ப்பாணத்திற்கு நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இப்பாதையின் சீர்கேடுபற்றி பிராந்தியசபைனர் தெரிவித்த போது தாம் சிரமதானம் மூலம் திருத்துவதாக பிரயாணிகள் சங்கத்தினர் தெரிவித்தனர். [கு-அ]

## விசேட பொலிஸ் பிரிவுகள்

[கொழும்பு]

நாட்டிலுள்ள 26 பொலிஸ் பிரிவுகளிலும் விசேட குற்றத் தடுப்பு பிரிவுகளை நிறுவுமாறு பொலிஸ்மா அதிபர் கட்டளையிட்டுள்ளார்.

இப்பிரிவுகளில் பொலிஸாருக்கும் றிசேவ் பொலிஸாருக்கும் விசேஷ பயிற்சியளிக்கப்படும். [க-அ]

## புலோலி கொள்ளை:

## யேசுராசாவுக்கு றிமாண்ட்

[புலோலி]

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் விற்பனை நிலையக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக டாக்சி சாரதியான ஆனைக்கோட்டை உயரப்புலத்தைச் சேர்ந்த யேசுராசா என்பவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசாரணையின் போது இவர்மீது சந்தேகம் ஏற்பட்டதால் பொலிசார் இவரைப் பருத்தித்துறை நீதவான் திரு கே. ஞானச்சந்திரன் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

நீதவான் சந்தேக நபரை அடுத்த மாதம் 9-ந் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார். டாக்சி பருத்தித்துறைப் பொலிஸ் பாதுகாப்பில வைக்கப்பட்டுள்ளது.

## 372 கொலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவு டி. ஐ ஜி. திரு ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

நாட்டில் கடநத மாதம் 97 கொலைச் சம்பவங்களும் நடந்துள்ளதாகவும் அவர் கூறினார்

இச்சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் நடைபெற்றுவருவதாகவும் அவர் கூறினார். [க-அ]

## பொன்னாலையில் லட்சார்ச்சனை

[சுழிபுரம்]

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவிலில் லட்சார்ச்சனை இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது. பத்து நாட்களுக்கு இவ்வர்ச்சனை நடைபெறும். 8ம், 9ம், 10ம் நாட்களில் விசேஷ தீபங்கள் இடம்பெறும் பதினொராவது நாளான 12ம் திகதி திங்கட்கிழமை காலை திருவடி நிலையில் தீர்த்தம் நிகழும். [அ]

## நாடகஅரங்கக்கல்லூரியின் 'கோடை'

## இன்று மேடையேற்றம்

[யாழ்ப்பாணம்]

நாடக, அரங்கக் கல்லூரி தனது ரசிகர் அவைக்காக தயாரித்தளிக்கும் மஹாகவியின் "கோடை' பா நாடகம் இன்று யாழ். வீரசிங்கம் பண்டபத்தில் மேடையேறுகின்றது.

நாடக அரங்கக் கல்லூரி தரமான நாடகங்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருப்பதுடன் நாடகங்களைப்பார்த்து உற்சாகமூட்டக்கூடிய ரசிகர்களைத் தோற்றுவிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளது. இந்த நோக்கத்துடன் நாடக ரசிகர் அவை ஒன்றையும் தோற்றுவித்துள்ளது. இந்த ரசிகர் அவையில் சேர்பவர்கள் நாடக அரங்கக் கல்லூரியினால் மேடையேற்றப்படும் நாடகங்களை கட்டணமின்றியே பார்க்கலாம். உறுப்பினர்களாகச் சேர்வதற்கு கட்டணம் அறவிடப்படுகின்றது.

நாடக ரசிகர் அவையினருக்காக நாட்டின் பல்வேறு இடங்களிலும் தயாரிக்கப்படும் தரமான நாடகங்கள் மேடையேற்றப்படும் என்று அறிவித்துள்ளன

இன்று மாலை மேடையேறும் 'கோடை' நாடகத்தை நெறியாளர் ம. சண்முகலிங்கம், அ தாசீயஸ் ஆகியோர் தயாரித்துள்ளனர். திரு. எம். கண்ணன் இசையமைக்க திரு. வி எம். குகராஜா நெறிப்படுத்தியுள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்பு

**வெற்றிடம்**

**வீட்டு வேலைப் பணிப்பெண்கள்**

மேற்படி பதவிக்கு சேரவிரும்பும் பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்வதற்கான பாஸ்போட்டுடன் நேர்முகப் பரீட்சைக்கு 5-3-79க்கு முன் காலை 9-5 மணிவரை சமுகந்தரவும்.

விபரங்களுக்கு

**குமரன் ரூறிஸ்ட் இன்,**

அறை இல: 30

67, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1801

**விற்பனைக்கு**

கொழும்புத்துறை துண்டி வீதியிலுள்ள இரண்டு பரப்பும் 8 குளியுமான காணி விற்பனைக்குண்டு. நேரில் வரவும். விபரம்: 49, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 1802

## மரண அறிவித்தல்

### திரு. ஆ. வைத்திலிங்கம்

கொழும்பு, 37, செட்டித்தெரு. A வைத்திலிங்கம் அன் கொம்பனி உரிமையாளர் திரு. ஆ வைத்திலிங்கம் காலமாகிவிட்டார் இவர் திருமதி சின்னத்தங்கம் கந்தையாவின் சகோதரரும், திருமதி K திருநாவுக்கரசு, டாக்டர் K. பாலசிங்கம் திரு K நடராசா, திருமதி V. C. பரமநாதன், திருமதி A N. யோகநாதன், திருமதி K சாயுச்சியநாதன், திருமதி A. சிவபாலசுந்தரம், திரு V வன்னியசிங்கம், திரு V வீரசிங்கம் ஆகியோரின் தாய்மாமனுரும் ஆவர் அன்னாரின் ஈமக்கிரிகைகள் இன்று[2-3-79] வெள்ளிக்கிழமை பிற்பகல் வண்ணார்பண்ணை, காங்கேசன்துறை வீதி, 415ம் இலக்க இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் மாலை4-00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் தகனஞ் செய்யப்படும். 1800

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு மார்ச் மாதம் 2-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the Geneial PostOffice The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu, Telephone: 389, Registered as a News Paper in Sri Lanka.-